
Vol. 9 | Special Issue 2 | April 2022 | P-ISSN: 2321-788X

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)






பன்னாட்டுக் கருத்தரங்கம்

## தமிழ் இலக்கியங்களில் பொதுவுடைமைக் கூறுகள்







தமிழ்த்துறை

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி

தேவகோட்டை



INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

SHANLAX #SINCE1990

# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

Vol. 9 Special Issue 2 April, 2022

P-ISSN: 2321-788X Impact Factor: 3.025

**Sree Sevugan Annamalai College**
*Devakottai*

SHANLAX #SINCE1990

**Shanlax International Journal of Arts, Science and Humanities**
*Madurai*

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# "தமிழ் இலக்கியங்களில் பொதுவுடைமைக் கூறுகள்"

13 ஔவையார் பாடல்களில் பொதுவுடைமை 47
ச. இளங்கோ

14 பாவேந்தர் கவிதைகளில் பாட்டாளி வர்க்கப் போராட்டம் 52
முனைவர் இரா. கண்ணதாசன்

15 வரலாற்று அடையாள இருப்புப் பின்னணியில் சங்க இலக்கியங்களும் கல்வெட்டுகளும் 57
முனைவர் சே. கணேசன்

16 கவிஞர் வாணிதாசனின் பொதுவுடைமைச் சிந்தனை ஒரு பார்வை 62
முனைவர் அ. கலைச்செல்வி

17 வெ.இறையன்பு படைப்புகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 67
மு. கற்பகம் & செ. நாகநாதன்

18 தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் சமத்துவம் 71
முனைவர் செ. கார்த்திகா

19 நா.முத்துக்குமாரின் கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 75
முனைவர் த. கார்த்திகேயன்

20 கம்பனில் பொதுவுடைமை 81
முனைவர் இரா. கீதா

21 புறநானூற்றில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 86
முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்

22 சித்தர்களின் பொதுவுடைமைக் கூறுகள் 91
த. சங்கீதா

23 திருக்குறளில் பொதுவுடைமைக் கூறுகள் 95
ந. சங்கீதா & முனைவர் மா. ரெத்தினேஸ்வரி

24 புரட்சிக்கவியில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 98
முனைவர் ஜெ. சங்கீதா

25 தமிழ் இலக்கியங்களில் அன்றும் இன்றும் பொதுவுடைமை 101
முனைவர் ரெ. சந்திரமோகன்

26 சங்க இலக்கியத்தில் பாலினப் பொதுவுடைமை 105
செ. சபிதா பேகம் & முனைவர் மா. ரெத்தினேஸ்வரி

27 கவிஞர் மீராவின் கவிதைகளில் சமுதாயம் 109
முனைவர் யா. சாம்ராஜ்

28 விருந்தோம்பலில் பொதுவுடைமைக் கூறுகள் 114
முனைவர் சோ. சுகன்யாதேவி

29 தமிழ் இலக்கியத்தில் கவிஞர் மீராவின் பொதுவுடைமை 119
ஆ. சுதாகர் & முனைவர் ச. சேதுகல்பனா

30 தமிழ்ச்சங்கக் காலப்பொதுவுடைமை தத்துவமும் ஓர் உண்மையும் 123
தி.லெ. சுபாஸ் சந்திர போஸ்

31 உடுமலை நாராயணகவியின் பொதுவுடைமைச் சிந்தனைகள் 126
முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை

32 நாலடியார் நல்கும் பொதுவுடைமைக் கூறுகள் 130
பி. சோனியா & முனைவர் கூ. இராஜலெட்சுமி

33 சமயப் பொதுநோக்கு 135
திருமதி. ம. சோனியா

34 செந்நெல் புதினத்தில் வர்க்கப் போராட்டம் 139
சோ. டோனிஷா & முனைவர் எஸ். அலக்ஸ்ஜேக்கப்

35 கவிஞர் இன்குலாப் கவிதைகளில் பொதுவுடைமைக் கூறுகள் 143
துரை. தமிழ்ச்செல்வன்

36 மு.மேத்தாவின் கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள் 146
சி. தவமணி

37 வள்ளலாரில் பொதுவுடைமை 149
முனைவர் செ. நாகநாதன்

# கவிஞர் மீராவின் கவிதைகளில் சமுதாயம்

*முனைவர் யா. சாம்ராஜ்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்புத்தூர், சிவகங்கை மாவட்டம்

மலர்: 9

சிறப்பிதழ்: 2

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

சமுதாயம் என்பது பல்வேறு வகைப்பட்ட மக்களையும், அவர்களது செயல்முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் குறிக்கப் பயன்படும் சொல்லாகும். மனிதனைவிட்டுச் சமுதாயமும், சமுதாயத்தைவிட்டு மனிதனும் தனித்து இயங்க முடியாது. சமுதாயத்தில் சில ஒழுங்குகள், கட்டுப்பாடுகள், வரையறைகள் உள்ளன. அதுவே சமுதாய மதிப்பீடுகளாகும். ஒரு சமூகத்தின், பொருளாதார அமைப்பையொட்டி அம்மதிப்புகள் தோன்றும். அதன்படி அச்சமூக அமைப்பு வளர்ச்சியுறும் போது, அதற்குத்தகுந்தாற்போல மாற்றம் பெறும். அதன் விளைவாகவே மனிதவாழ்வில் பல சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன. இதன்படி கவிஞர் மீரா கவிதைகளில் காணலாகும் சமுதாயச் சிந்தனை சமூக மறுமலர்ச்சிக்கு எவ்வாறுவித்திடுகின்றதுஎன்பதைஇக்கட்டுரை வழி அறியலாம்.

## மீரா படைப்புகளில் சமுதாயம்

கவிஞர் மீராவின் கவிதைகள் சமூகத்தைப் பல கோணங்களில் படம் பிடித்துக்காட்டுகின்றன. அரசியல், கல்விச் சீர்க்கேடு, ஏழைகளின் நிலை போன்றவை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கவிஞர் மீராவின் நோக்கம் இச்சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்பதாகும். இதனை "இலக்கிய உப்பரிகையில் உலாவுவதை விடச் சமுதாய நடைபாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன்"(ஊசிகள் ப:4) என்ற அவரது கூற்றிலிருந்து அறியலாம். மேலும் அவர் அங்கதக் குறிப்புடன் கவிதைகள் புனைந்தமைக்கு முக்கியக் காரணம் தன்அடிமனதில் இருந்த சமுதாயத்தில் உள்ள தீங்குகளைக்களைய வேண்டாம் என்ற எண்ணமாகும்.

"சமுதாயத்தின் நோய்க் கிருமிகளைப் பார்க்கிற போது சங்கடப்படுகிறேன். கோபம் வருகின்றது." (ஊசிகள் ப:3) என்பது இவரின் உள்ளக்குமுறலாகும். சமுதாயத்தில் உள்ள பல்வேறுபட்ட தீங்குகளையும் நோய்க்கிருமிகள் என்று குறிப்பிடுகின்றார்.

நோய்க்கிருமிகள் கண்களுக்கு வெளிப்படையாகத் தெரியாமல் பலவிதமான இன்னல்களை நம்முடைய உடலுக்கு ஏற்படுத்தும் தன்மையுடையன. நோய்க் கிருமிகளைப் போலவே நம்முடைய கண்களுக்குப் புலனாகாத சில தீய சக்திகள், பணம் படைத்தவர்கள் நாடெங்கும் பரவியிருந்து மக்களைப் பலவிதங்களில் நசுக்குகின்றனர். இப்படிப்பட்ட சமுதாயத்தைக் காணுகின்ற மீரா, தம்முடைய கவிதைகள் மூலமாகச் சிலரின் தீய செயல்களையும், அதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள் நிலைகளையும் படிப்போர்க்கு நகைப்புட்டி சிந்தனை உணர்வைத் தூண்டும் வகையில் படைத்துள்ளார்.

### சமுதாயத்தில் சாய்ந்த கோபுரங்கள்

பல்வகைப்பட்ட துறைகளாகிய கோபுரங்கள், சமுதாயம் எனும் அடித்தளத்தில் எழுந்துள்ளன. சரியாக நிற்க வேண்டிய கோபுரங்கள் சாய்வைப் பெறுமானால், சமுதாய அடித்தளம் ஆடி அசைவது எதிர்பார்க்கும் ஒன்றாகும். கோபுரங்களின் நிமிர்வே சமுதாய அடித்தளத்திற்கு ஆற்றலையும், உறுதியையும் வழங்க வல்லதாகும். தமிழ்ச் சமுதாயமென்னும் அடித்தளத்தை அசைக்கச் செய்துள்ள கோபுரங்களாகக் கவிஞர் மீரா காட்டியுள்ள துறைகள் பல்வகையினவாகும்.

அரசியல் உலகின் போலித்தன்மை, செயல்பாடில்லாத வெற்றுமொழி உணர்வு, பயனற்ற கல்விமுறை, சரியாக சிந்திக்கப்படாத சமய உணர்வு, வணிகநேர்மை சரிவு, நிர்வாக ஊழல், சமுதாய வாழ்க்கையின் மேடு பள்ளங்கள், இன்றைய இளந்தமிழரின் இழிநிலைகள், நன்மை செய்யாத நாட்டுப் பற்று, செய்தி இதழ்களின் செம்மையற்ற போக்கு, மக்களை மயக்கும் போலி கவர்ச்சிகள், தனிமனித இயல்புக் குறைபாடுகள் என பல்வேறு துறைகளில் பரவிப் படர்ந்துள்ள பாழ்நிலைகளைச் சுட்டிக்காட்டிச் சீர்செய்ய முற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### அரசியல்

உடம்பிற்கு முதன்மை சேர்க்கும் தலை எனும் உறுப்பினைப் போன்று, சமுதாயத்தில் தலைமை உறுப்பு அரசியல் ஆகும். தலை சரியாக இருந்தால் அன்றி உடம்பின் பிற உறுப்புகளும் சரியாக இயங்கா. வேர்கள் சிறந்தால் அன்றி, மரக்கிளைகள் மாண்புறாது. ஆகவே அரசியல் வேர், சமுதாயத்தில் சரியாக ஊன்றப்படவில்லை யாயின் எஞ்சிய துறைக்கிளைகள் ஒடிந்தே விழும் தன்மையாய் அமையும்.

முடியாட்சி நடைபெற்ற பழங்காலத்திலும், குடியாட்சி நடைபெறுகின்ற இக்காலத்திலும், "அரசு" என்பது தலையாய இடம் பெறுகின்றது. அரசியலில் ஏற்படுகின்ற சிறு நிகழ்வுகள் கூடச் சமுதாயத்தில் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே தமிழ்ச் சான்றோர் அரசியல் நடைமுறைகள் அறநெறிவழுவாது நடைபெற வேண்டும் என்பதனை,

> **"மாண்ட**
> **அறநெறி முதற்றே அரசின்கொற்றம்"**
> **(கி.இராசா (ப.ஆ) புறநானூறு மூலமும் உரையும் ப:55)**

என்று வலியுறுத்துகின்றார். ஆனால், இன்றைய நடைமுறையில் அரசாங்கம் கட்சிகளுக்கு வாக்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக மக்களின் கால்களில் விழவும் தயாராக இருக்கின்றனர். தங்களது வருமானத்தைப் பெருக்குவதிலேயே பெரும்பாலான அரசியல் தலைவர்கள் கவனத்தைச் செலுத்தி மிகுந்த பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி கட்சி தாவுகின்றனர். இதனை.

> **"எங்கள் ஊர் எம்.எல்.ஏ**
> **ஏழு மாதத்தில்**
> **எட்டுத்தடவை**
> **கட்சி மாறினார்**
> **மின்னல் வேகம்**
> **என்ன வேகம்?**
> **இன்னும் எழுபது**
> **கட்சி இருந்தால்**
> **இன்னும் வேகம்**
> **காட்டி இருப்பார்**
> **என்ன தேசம்?**
> **இந்த தேசம்? (ஊசிகள் ப:15)**

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார். இதில் எந்தக் கட்சியில் இருந்தால் தனக்கு நன்மை உண்டாகும் என்பதனை அறிந்து பயன்பெறுவதற்காகக் கட்சித் தாவல் நிகழ்த்துவதை அப்பட்டப்படுத்துகிறது.

### சாதியின் நிலை

கவிஞர் மீரா இன்றைய சாதியின் இழிநிலை குறித்து பல்வேறு கவிதைகளில் கூறியுள்ளார்.

> **"வேக்காடு சாதிக்குவைக்கும் நாளே**
> **வியனுலகப் புகழ் நமக்குக் கிட்டும் நாளாம்**
> **சாதியின் வேரை வெட்டுங்கள் -நெஞ்சில்**
> **சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்"**
> **(இரா.மோகன், முடியரசன் ப:52)**

என்று சாதியினை முடியரசன் வெளிப்படையாக வெறுக்கின்றார். கவிஞர் மீரா சாதியானது மக்கள் மனதோடு பிணைந்திருப்பதைத் "தமிழ்ப்பற்று" எனும் கவிதையில் கேலி செய்து சமூகத்தின் நிலையினைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

> **"ஜாதி வேண்டும்**
> **என்றால்பொறுமையாய்**
> **இருக்க முடியாதுஎன்னால்**
> **சரியாய்ச்**
> **சாதி வேண்டும்**
> **என்றே சாற்றும்"**
> **(ஊசிகள் ப:16)**

என்ற கவிதையில் முதலில் அமைந்துள்ள இரண்டு அடிகளைப் படிக்கின்ற போது மக்கள் "சாதி" என்பதனை வெறுக்கின்றனர் என்று கருதத் தோன்றுகின்றது. ஆனால், இறுதியாக அமைந்துள்ள மூன்று அடிகளைப் படிக்கும் போது மக்களிடையே "சாதி" மீது உள்ள ஆழ்ந்த பற்று வெளிப்படுகின்றது. கவிதைகளில் முதல் அடிகளைப் படிக்கும் போது கவிஞர் மீரா சொல்லப் போகும் கருத்தினை, நம்மால் உய்த்துணர முடியவில்லை. முழுமையாகப் படிக்கும் போது தான் கவிஞரது சமுதாயச் சாடல்களை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

### மக்களிடையே உள்ள ஏழ்மை நிலை

> **"ஏழையென்றும் அடிமையென்றும்**
> **எவனுமில்லை ஜாதியில்**
> **இழிவுகொண்ட மனிதர் என்பர்**
> **இந்தியாவில்இல்லையே"**
> **(இராம.லெட்சுமணன் (ப.ஆ) பாரதியார் கவிதைகள் ப:381)**

என்ற பாடலடிகளில் படம்பிடித்துக் காட்டுவார் பாரதியார். இதில் மக்களிடையே காணப்பெறும் ஏழ்மை நிலையைப் பல்வேறு கவிஞர்களும் பற்பல நிலைகளில் கூறிச் செல்கின்றனர். ஏழ்மை நிலையை மகாகவி பாரதி, மனிதர்கள் அனைவரும் ஒரே அளவில் மதிக்கத்தக்கவர்கள். மனிதர்களிடம் உள்ள பணத்தை வைத்துக் கொண்டு உயர்வு, தாழ்வு பாராட்டுதல் கூடாது என்ற கருத்தைப் பாரதி வலியுறுத்தியுள்ளார். கவிஞர் மீரா நாட்டில் நிலவும் வறுமை காரணமாக மக்களின் நிலைத் தாழ்ந்திருப்பதைக் கவிதை மூலமாகப் படம்பிடித்துக் காட்டி, ஏழ்மையினரை எளியவர்களாகக் கருதி எள்ளி நகையாடும் செல்வந்தர்கள் மனதில் சென்றுதைக்கும் படியாகக் கவிதை புனைந்துள்ளார். சுதந்திரம் அடைந்த இந்தியா முன்னேறும் நாடுகளின் ஒன்றாக விளங்கினாலும் "வறுமை" என்பது மக்களைவிட்டு நீங்காமல் இருக்கின்றது.

> **"கவிஞன் நிகழ்காலத்தை உள்ளவாறு**
> **நன்குகண்டறிகின்றான்"**
> **(மு.வரதராசன். இலக்கிய ஆராய்ச்சி ப:42)**

என்ற ஷெல்லியின் கருத்திற்கு ஏற்பக் கவிஞர் மீராவும் சமுதாயத்தை உற்று நோக்குகின்றார்.



SHANLAX
International Journal of Arts, Science and Humanities

அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்ற கருத்தை பாரதி,

**"தனியொருவனுக்குஉணவில்லை யெனில்**
**ஜகத்தினைஅழித்திடுவோம்"**

*(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப:148)*

என்று வலியுறுத்துகின்றார். கவிஞர் மீரா இன்றைய சமுதாயத்தில் உள்ள சூழலை,

**"வருக வருகவாசகம்**
**வாசலில்**
**கொல்லையில்**
**எச்சில்இலைக்கு**
**இந்நாட்டு மன்னர் யாசகம்"**

*(குக்கூ ப:34)*

என்ற அடிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார். ஒரு சில பணக்காரர்கள் ஏழைகளை ஆதரிப்பதைப் போல தங்களைக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் பொது இடங்களில் பணக்காரர்களுக்கு மரியாதைக் கேடுவந்து விடும் என்று கருதி ஏழைகளை உள்ளே அனுமதிக்கமாட்டார்கள். ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு மனரீதியாக இருக்கின்றது. வீட்டு விழாக்களில் வாசலில் "வருக, வருக" என்று எழுதியிருப்பர். செல்வந்தர்களது வீட்டு வாசல் வழியாக ஏழைகள், பிச்சைக்காரர்கள் சென்று உணவருந்த முடியாது. ஆனால் பிச்சைக்காரர்கள் கொல்லைப்புறமாக விழுகின்ற எச்சில் இலைகளில் உள்ள உணவை உண்ணுகின்றனர். மனிதனை மனிதன் ஒதுக்கும் நிலையினை கவிஞர் மீரா இக்கவிதையில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## தனிமனித நடத்தை

தனி மனிதன் தன்வாழ்வில் கடைப்பிடிக்கின்றச் சிறந்த பண்பாடு சமுதாய மேம்பாட்டுக்கு இன்றியமையாததாகின்றது. "தனிமனிதர் அதிலும் குறிப்பாக அறிவாளிகள் நல்லவர்களாக இல்லாவிட்டால் சமூகமும் நல்லதாகத் திகழாது" (மு.வரதராசன், இலக்கியத்திறன் ப:175) என்பார். ஆனால் இன்றையக் காலக் கட்டத்தில் சில எழுத்தாளர்கள் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பொருளை எழுதிச் சமுதாயத்தைச் சீர்திருத்த முனைவதைப் போலத் தங்களை அடையாளம் காட்டிக் கொள்கின்றனர். ஆனால். நடைமுறையில் எழுத்தாளர்கள் சிலர் அதேதவறினைச் செய்கின்றனர்.

இதனை மீரா,

**"அவர்**
**சிவப்பு விளக்குச்**
**சிறுகதைஎழுதிச்**
**சேர்த்த பணத்தைச்**
**செலவு செய்வது எப்படிஎன்று**
**சிந்தனைத் தேரில் சென்றார்**
**பின்னர்**
**சிவப்பு விளக்குத்**
**தெருவில் நின்றார்"** ***(ஊசிகள் ப:62)***

எனக் கேலி செய்துள்ளார்.

## வாழ்க்கைப் போராட்டம்

தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்தினைக் குறிக்கும் போது "சேயோன் மேயமை வரை உலகமும்" எனக் கூறுகின்றார். முருகன் விரும்புகின்ற. மேகம் சூழ்ந்த மலையினையுடையது குறிஞ்சி நிலம் இதனைக் கவிஞர் தம் குக்கூ கவிதையில் "கண்ணைக் கவரும் குறிஞ்சி" எனக் குறிப்பிடுகின்றார். நாம் இயற்கையின் நிகழ்வுகளான மேகக் கூட்டங்கள் மலையருவி, தென்றலின் இனிமை, மூலிகைகளின் நறுமணங்கள் இவற்றை அனுபவிக்க வேண்டுமானால் மலையின் உச்சியினை அடைய வேண்டும். இதனைக்கவிஞர்,

**"கல்தான் முள்தான்**
**காலில் குத்தும் நெருஞ்சி**
**கடந்து போ**
**மேலே மேலே**
**நடந்து போ**
**கண்ணைக் கவரும் குறிஞ்சி"**

*(குக்கூ ப:35)*





என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார். மலைப்பாதை கரடு முரடாக முட்புதர்களுடன் காணப்பெறும். மலைமேலே உள்ள மூலிகைக் காற்று, மேகக் கூட்டம் போன்றவற்றைக் காணுவதற்கும், அனுபவிப்பதற்கும் கரடுமுரடான பாதைகளைக் கடந்து செல்ல வேண்டும். அதுபோல வாழ்வில் நாம் முன்னேறி உயர்ந்த பாதையில் வருகின்ற இன்னல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று பாடம் புகட்டுகிறார்.

## முடிவுரை

கவிஞர் மீரா இவ்வகிலம் மாற்றம் காண வேண்டும் என்பதில் பேரார்வமுடையவர். அதற்காகத் தனது எழுத்துக்கள் மூலம் தீர்வும் கண்டவர். "வழி நடத்துகிறவர் சரியாக இருக்கின்ற போது வழிநடத்தப்படுபவர் சரியாக இருப்பார்" என்ற முற்போக்கு வார்த்தைகளை முன்வைத்து இச்சமூகம் மறுமலர்ச்சி காண வேண்டுமெனில் அரசியல் தொடங்கி, ஒவ்வொரு சூழலும் மனிதர்களுக்குப் பயனளிக்க வேண்டும். என்பதோடு, நடப்பைச் சுட்டிக்காட்டி, இனியேனும் பெருமாற்றம் காண வேண்டும் என்ற ஏக்கப் பெருமூச்சானது இவரது எல்லாக் கவிதைகளிலும் மேலோங்கி இருப்பதை உணர முடிகிறது.